# அனகாபுத்தூர் நகராட்சி

## சென்னை – 600 070.

கூட்ட எண்.40/2019 நாள். 28.02.2019

## தனி அலுவலர் அவர்களின் பிப்ரவரி 2019 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்

28.02.2019ம் நாள் வியாழன்கிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் பிப்ரவரி 2019 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | பிப்ரவரி 2019 | 0 | 0 | 8 | 2 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2019 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம், சென்னை –8 அவர்களின் 29.11.2018.ம் தேசிய கடிதம் எண்: L1/5617/2018ல் அனகாபுத்தூர் கிராமம் சர்வே எண்: 144/3C2 & 3Dல் உள்ள இடத்தை வீட்டு மனைகளாக அமைக்க திருவாளர்கள் V.விஜயகுமார் மற்றும் நான்கு நபர்கள் சமர்பித்துள்ள மனை படத்தில் கண்டுள்ள சாலை பகுதியினை தானபத்திரம் மூலம் எடுத்து அதன் விவரத்தினை அனுப்பு வைக்க கோரப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இடம் காலியாக உள்ளது, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் மூலம் வரப்பெற்றுள்ள மனை வரை படத்தில் கண்டுள்ள சாலைக்கு அடிப்படை வசதிகளான சாலை தெரு விளக்கு, மழைநீர் கால்வாய், குடிநீர் வசதிகள் செய்வதற்கான மதிப்பீடு ரூ.9.00 லட்சத்திற்கு தயார் செய்து, அந்த தொகையை செலுத்த மனுதார்களுக்கு 19.02.2019ல் அறிவிப்பு அனுப்பப்பட்டது. மனுதாரர்கள் மேற்கண்ட ரூ.9.00 லட்சம்

தொகையினை நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளனர். (ரசீது எண்: 017/01/2/18-19/0005452, நாள்: 28.2.2019)

சாலைப்பகுதிக்கான அடிப்படை வசதிகளுக்கான கட்டனம் செலுத்தியுள்ளதால், சாலைபகுதியினை மன்றத்தின் ஒப்புதல் பெற்றபின் தானபத்திரம் மூலம் நகராட்சி எடுக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க. எண்:1407/2018/எப் 1)

<u>பொருள் எண். 4</u>

இந்நகராட்சியில் உள்ள பொறியியல் பிரிவு , வருவாய் பிரிவு , வரி வசூல் மையம் மற்றும் கணினி பிரிவு ஆகிய கணினிகள் உயர்மின் அழுத்தும் காரணமாக பழுது ஏற்பட்டதை சரிசெய்ய கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 09.01.2019 அன்று ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு (லட்சத்தில்) | பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி சதவீதம் (மதிப்பீட்டிற்கு) திரு/திருமதி | |
|---|---|---|---|---|
| | | | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர் | விகிதம் |
| 1 | இந்நகராட்சியில் உள்ள பிரிவு , வருவாய் பிரிவு , வரி வசூல் மையம் மற்றும் கணினி பிரிவுகளில் உள்ள கணினிகளை பழுது பார்த்தல் மற்றும் Network பணி செய்தல் | 2.00 | இன்காம் சொலியூசன் | 0.10% குறைவு |
| | | | எஸ்.ஆர்.டி.டேட்டா சொலியூசன் | 2.00% அதிகம் |

**அலுவலக குறிப்பு :** மேற்படி பணிக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தபுள்ளி மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>பொருள் எண்.5</u>

இந்நகராட்சியில் மேலாளராக பணிபுரிந்து வரும் திருமதி.சூ.விஜயலட்சுமி அவர்கள் உடல் நல குறைவால் மருத்துவ செலவு மேற்கொண்டதற்கு ரூ.6145/ஐ மீள வழங்க கோரியுள்ளார். 21.04.2019 அல்லது அதற்கு முன்னர் அரசு பணியில் சேர்ந்த பணியாளர்களுக்கு மற்றும் மருத்துவ படிகள் பெறாதவர்களுக்கும் மருத்துவ செலவு மீள வழங்க தகுதியுடையவர்களாகவும் , வருடாந்திர உச்சவரம்பு மருத்துவ செலவினங்களில் குறைந்தபட்ச வரம்பு 15 சதவிகிதம் வழங்க அரசாணை எண் 306 நிதி (படிகள் ) துறை நாள். 13.10.2017ன்படி மேற்கண்ட பணியாளருக்கு மருத்துவ செலவினத்தில் அன்னாரின் திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் 15% ரூ.6145/ஐ வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>பொருள் எண்.6</u>

அனகாபுத்தூர் நகராட்சி 18 வார்டு பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்கான Dengue Breeding Checkers என்ற கொசு ஒழிப்பு பணியாளர்கள் 41 நகர்கள் பேன்சி ஏஜென்சி நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்யப்பட்டு வந்தது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–05, மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் ஆய்வுக்கூட்டங்களில் கொசு ஒழிப்பு களப்பணியாளர்களை தொடர்ந்து பயன்படுத்தி கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேற்படி அறிவுறுத்தலின்படி கொசு ஒழிப்பு பணி தொடர்ந்து செய்திட பாராளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளதால் பிப்ரவரி 2019 முதல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.7</u>

08.02.2019ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | அனகாபுத்தூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி (வார்டு எண்.1 முதல் 9 வரை) | 9.80 | எம்.ஆஷா ஒரு கிலோ லிட்டர் ரூ.108.50/–<br>ஏ.சுசீலா ஒரு கிலோ லிட்டர் ரூ.120/– | குறைவு<br>அதிகம் |
| 2. | அனகாபுத்தூர் நகராட்சி காமராஜபுரத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி (வார்டு எண்.10 முதல் 18 வரை) | 9.80 | எம்.ஆஷா ஒரு கிலோ லிட்டர் ரூ.108.50/–<br>ஏ.சுசீலா ஒரு கிலோ லிட்டர் ரூ.120/– | குறைவு<br>அதிகம் |

அலுவலகக்குறிப்பு குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2.குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.8</u>

15.02.2019ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | தென்றல் நகர் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலைகளை மறுசீரமைப்பு செய்தல் பணி | 5.00 | வி.குணாளன்<br>டி.கே.இண்டஸ்ட்ரியல் | 0.10 %குறைவு<br>1.20 %அதிகம் |
| 2. | பஜார் தெரு (சமுதாய கூடம் அருகில்), சண்முக முதலி தெரு (கல்மடுவு அருகில்), அயோத்தியம்மன் கோயில் தெரு பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணி (Water ATM) ஆழ்துளை கிணறு, மின் இணைப்பு மற்றும் பைப்லைன் அமைத்தல் பணி | 7.50 | ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ்<br>எஸ்விபி எலக்க்டரிகல்ஸ் | 0.05 %குறைவு<br>1.25 %அதிகம் |
| 3. | கலைவாணர் தெரு, தென்றல் நகர் சிலப்பதிகாரம் தெரு பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணி (Water ATM) ஆழ்துளை கிணறு, மின் இணைப்பு மற்றும் பைப்லைன் அமைத்தல் பணி | 5.00 | ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ்<br>எஸ்விபி எலக்க்டரிகல்ஸ் | 0.05 %குறைவு<br>1.25 %அதிகம் |
| 4. | அம்மா உணவகம் அருகில் ஆதார் மையம் மற்றும் சமுதாய நலக்கூடத்திற்கு நாற்காலி, மணமகன் மற்றும் மணமகள் அறைக்கு பீரோ, கட்டில் உணவு கூடத்திற்கு மின் விசிறி பொருத்தும் பணி | 5.00 | டி.கே.இண்டஸ்ட்ரியல்<br>வி.குணாளன் | 0.10 %குறைவு<br>1.20 %அதிகம் |

அலுவலகக்குறிப்பு : குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.9</u>

26.02.2019ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 9 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள் , பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி | 9.90 | ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ் எஸ்விபி எலக்ட்ரிக்கல்ஸ் | குறைவு அதிகம் |
| 2 | வார்டு எண்.10 முதல் 18 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள் , பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி | 9.90 | ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ் எஸ்விபி எலக்ட்ரிக்கல்ஸ் | குறைவு அதிகம் |
| 3 | அலுவலக பயன்பாட்டுக்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள், இரசீது புத்தகங்கள், கணிணி பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் அச்சடித்து வழங்குதல். | 9.90 | மடிபாக்கம் ஸ்டேசனரி ரிஜிஸ்டர்&மேக்கிங் இன்டஸ்டிரியல் கோ–ஆப் சொசைட்டி லிமிடெட் மதுராந்தகம் மல்டிபார்பஸ் இண்டஸ்டிரியல் கோ–ஆப் சொசைட்டி லிமிடெட் | குறைவு அதிகம் |
| 4 | குடிநீர் டேங்கர் லாரிக்கு ஒட்டுநர் 2 நபர் மற்றும் கிளினர்கள் 2 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் சப்பை செய்தல் | 7.00 | ஏ.சுசீலா எம்.ஆஷா | குறைவு அதிகம் |
| 5 | பொது சுகாதார தளவாட பொருட்கள் வார்டு எண்.1 முதல் 9 வரை விநியோகம் செய்தல் | 9.90 | கிருத்திகா அசோசியேட்ஸ் தாம்பரம் கடப்பேரி ஆதிதிராவிடர் தொழில் ஒப்பந்த கூட்டுறவு சங்கம் லிட் | குறைவு அதிகம் |
| 6 | பொது சுகாதார தளவாட பொருட்கள் வார்டு எண்.10 முதல் 18 வரை விநியோகம் செய்தல் | 9.80 | கிருத்திகா அசோசியேட்ஸ் தாம்பரம் கடப்பேரி ஆதிதிராவிடர் தொழில் ஒப்பந்த கூட்டுறவு சங்கம் லிட் | குறைவு அதிகம் |
| 7 | தற்காலிகமாக குடிநீர் சேமிப்பு | 9.80 | லட்சுமி | 0.10% |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொட்டிகள் அமைத்தல் | | எண்டர்பிரைசஸ்<br>மகாலட்சுமி<br>எண்டர்பிரைசஸ் | குறைவு<br>1.20%<br>அதிகம் |
| 8 | நகராட்சி பகுதிகளில் உள்ள 240 எண்ணிக்கை மின் மோட்டார்களை பழுதுபார்த்து பராமரித்திட தேவையான மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் | 9.80 | லட்சுமி<br>எண்டர்பிரைசஸ்<br>மகாலட்சுமி<br>எண்டர்பிரைசஸ் | 0.10%<br>குறைவு<br>1.30%<br>அதிகம் |
| 9 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 13 எண்ணிக்கை குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை பராமரிப்பு பணி செய்தல் | 7.50 | ஓசோன்<br>டெக்னாலஜிஸ்<br>ஐ டெக் சுவிட் வாட்டர்<br>டெக்னாலஜி<br>பிரைவேட் லிமிடெட் | 0.10%<br>குறைவு<br>1.40%<br>அதிகம் |
| 10 | நகராட்சி பகுதிகளில் உள்ள 240 எண்ணிக்கையிலான மின் மோட்டார்கள் மற்றும் கைப்பம்பினை பழுதுபார்த்து பராமரித்திட தேவையான ஆட்களை சப்ளை செய்தல் | 9.50 | ஏ.சுசீலா<br>எம்.ஆஷா | குறைவு<br>அதிகம் |
| 11 | அரசு பள்ளிகளின் கழிவறைகள் பராமரிப்பு பணிகள், துப்புரவு பணிகள் செய்ய பணியாளர்களை சப்ளை செய்தல் மற்றும் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல் பணி | 9.90 | பேன்ஸி ஏஜென்சி<br>ஸ்ரீவாரி<br>எண்டர்பிரைசஸ் | குறைவு<br>அதிகம் |
| 12 | தட்டச்சு, ஜெராக்ஸ் பிரதிகள், போட்டோ மற்றும் வரைப்படம் தயாரித்தல் | 2.50 | விஜய் ஜெராக்ஸ்<br>வள்ளி ஜெராக்ஸ் | குறைவு<br>அதிகம் |

அலுவலகக்குறிப்பு :குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.10</u>

27.02.2019ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | லெமன் கிராஷ் கிருமிநாசினி திரவம் 100 லிட்டர் சப்ளை செய்தல் பணி | 2.80 | பேன்ஸி ஏஜென்சி<br>ஸ்ரீவாரி<br>எண்டர்பிரைசஸ் | குறைவு<br>அதிகம் |
| 2. | பொது சுகாதார பிரிவில் உள்ள வாகனங்களுக்கு காற்று நிரப்ப | 1.55 | பேன்ஸி ஏஜென்சி<br>ஸ்ரீவாரி | குறைவு<br>அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | காற்று அடிக்கும் இயந்திரம் மற்றும் பசுமை உரக்குடில் அமைப்பு (ம) பாதை வரைபடம் சப்ளை செய்தல் பணி | | எண்டர்பிரைசஸ் | |
| 3. | பொது சுகாதார பிரிவில் உள்ள பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்களில் கழிவு பிரித்தல் (Waste Segregation) விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டு நிறுவுதல் பணி | 1.30 | பேன்ஸி ஏஜென்சி ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் | குறைவு அதிகம் |
| 4. | பசுமை உரக்குடிலில் உள்ள எரியூட்டப்பட தகுதியான கழிவுகளை அரியலூர் மாவட்ட சிமெண்ட் நிறுவனத்திற்கு பேக்கிங் செய்து அனுப்ப தேவையான பொருட்கள் சப்ளை செய்தல் பணி | 3.00 | பேன்ஸி ஏஜென்சி ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் | குறைவு அதிகம் |
| 5. | பொது சுகாதார பிரிவில் உள்ள டிராக்டர் (TN 22 3732) வாகனத்தில் ஏற்பட் பழுதுகளை சரிப்பார்த்தல் பணி | 0.80 | ராதாகிருஷ்ணன் ஆட்டோ ஒர்க்ஸ் மகா சக்தி பாடி ஒர்க்ஸ் | குறைவு அதிகம் |
| 6. | பொது சுகாதார பிரிவில் உள்ள குப்பை லாரி (TN 22 AU 2976) வாகனத்தில் ஏற்பட்ட பழுதுகளை சரிபார்த்து தகுதிச் சான்று பெறுதல் பணி | 1.70 | ராதாகிருஷ்ணன் ஆட்டோ ஒர்க்ஸ் மகா சக்தி பாடி ஒர்க்ஸ் | குறைவு அதிகம் |

அலுவலகக்குறிப்பு : குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.11</u>

19.02.2019ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி பணி (IUDM) 2018–19 | | | | |
| 1. | அன்னை குடியிருப்பு மற்றும் பாரி நகர் முதல் காமாட்சி நகர் 5வது தெரு வரை மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 57.00 | ஆர்.ஆர்.டெவலபர்ஸ் | 4.94 %அதிகம் |
| 2. | பாலாஜி நகர் 3 வது பிரதான சாலை முதல் ராகவேந்திரா | 57.00 | டி.செந்தமிழ்<br>ஆர்.ஆர்.டெவலபர்ஸ் | 4.93 %அதிகம்<br>6.29 %அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கோயில் வரை மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | | | |

அலுவலகக்குறிப்பு : மதிப்பீட்டுத் தொகையினை விட அதிக விலைப்புள்ளி கொடுத்துள்ள (திட்ட பணி என்பதால் விரைந்து முடிக்க) ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்பள்ளியை ஏற்கவும், திட்ட நிதியை விட கூடுதாகும் செலவினம் ஏற்டுமாயின் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.12</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கஸ்தூரி பாய் நகர் சுடுகாட்டில் நவீன எரிவாயு தகனமேடை கட்டப்பட்டுள்ளது. மேற்படி நவீன எரிவாயு தகன மேடையினை சடலத்தை எரிக்க தன்னார்வு தொண்டு நிறுவனம் மூலம் நடத்திட உத்தேசிக்கப்பட்டு யாவரும் முன்வராத காரணத்தால், பிற நகராட்சிகளில் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதை ஆராய்ந்து செயல்படுத்துமாறு உயர் அலுவலர்களால் அறுவுறுத்தப்பட்டது. இந்நிலையில் கைலாய நாதர் அறக்கட்டளை நிறுவனம் நவீன எரிவாயு தகனமேடை நடத்திடவும், அதற்கு ஒரு சடலத்தை எரியூட்ட ரூ.3000/—க்கு 2018—19ம் நிதியாண்டில் அனுமதி வழங்கப்பட்டு 28.02.19 அன்று முடிவடைந்தது. மேற்படி நிறுவனம் தொடர்ந்து நடத்திடவும், ஒரு சடலத்திற்கு எரியூட்ட ரூ.4000/—ஐ பொது மக்களிடமிருந்து பெற அனுமதிக்க கோரி கடிதம் வழங்கியுள்ளதை தொடர்ந்து மேலும் ஒரு வருட காலத்திற்கு மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு. மேற்படி தொகை ரூ.4000/—த்தை பொதுமக்களிடம் இருந்து பெற்று கொள்ள கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு ஒரு வருட காலத்திற்கு உத்தரவு வழங்கிட கூட்டம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

| | |
|---|---|
| 1. | எரிவாயு தகனமேடையை அறக்கட்டளையே நடத்தப்பட வேண்டும். குத்தகைக்கு விடக்கூடாது. |
| 2. | எரிவாயு மயானம், காரியங்கள் இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்த காரியங்களும் நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக் கூடாது. எந்த சட்டவிரோத நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற அனுமதிக்கக் கூடாது. |
| 3. | ஒலி, ஒளி பெருக்கினை அறக்கட்டளை பயன்படுத்தக்கூடாது. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்மந்தமாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் இதர சட்டவிதிமுறைகளுக்கும் அறக்கட்டளை கட்டுப்பட வேண்டும். |
| 4. | மேற்படி இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே முழுப் பொறுப்பாகும். |
| 5. | எரியூட்டும் இயந்திர புகைபோக்கிகள் புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையிலும் தக்க உயரத்திலும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி பராமரிக்கப்பட வேண்டும். |
| 6. | நவீன மயானத்தினை பயன்படுத்துவோர்கள் செலுத்த வேண்டிய |

| | |
|---|---|
| | கட்டணத்தை ஆணையாளர் / சுகாதார ஆய்யவாளர் மற்றும் நிறுவனத்தைச் சார்ந்த ஒருவர் கொண்ட குழு ஒவ்வொரு வருடமும் நிர்ணயிக்கலாம். இக்கட்டணம் இலாப நோக்கமின்றி செலவுகளை சரிக்கட்டும் விதமாக நிர்ணயிக்கப்பட வேண்டும். |
| 7. | ஜாதி, மத இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொது எரிவாயு மயானமாக பயன்படுத்திட வேண்டும். |
| 8. | எரிவாயு மயானத்தை சுற்றி தோட்டம் அமைத்தல், செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல், காவல் அரண் அமைத்தல் மற்றும் மயானத்தைச் சுற்றி மதிற்சுவர் எழுப்புதல் ஆகிய செலவினங்களை தனியார் அறக்கட்டளை ஏற்க வேண்டும். |
| 9. | எரிவாயு மயானத்தில் அறக்கட்டளை எவ்வித கூரை வேய்ந்த கட்டிடமோ அல்லது தீப்பற்றக்கூடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்கப்படக் கூடாது. |
| 10. | எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்ட பிரச்சனைகளுக்கு நிறுவனமே பொறுப்பேற்க வேண்டும். |

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நவீன எரிவாயு தகனமேடையில் சடலங்களை எரியூட்டும் பணியை மேற்கொள்ள கைலாய நாதர் அறக்கட்டளை என்ற நிறுவனத்திற்கு மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.13</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்டகஸ்தூரி பாய் நகர் சுடுகாட்டில் கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடையை மாதம் ஒரு முறை அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை இயந்திரங்களை பணியாளர்கள் கொண்டு ஆய்வு செய்து பொருட்கள் மாற்றுவது மற்றும் பராமரிப்பு பணி செய்திட சம்மதம் தெரிவித்து எஸ்.ஜி.எஸ். சர்வீசஸ் அறக்கட்டளை சென்னை என்ற நிறுவனம் அனுமதி கோரியும் கடிதம் கொடுத்துள்ளது. இயந்திரங்களை பராமரிப்பு பணி மேற்கொள்ள ஓராண்டிற்கு ரூ.150000/-ஐ வழங்க கோரியுள்ளனர். எனவே கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு ஒப்படைக்கப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு பராமரிக்க உத்தரவு வழங்கிட கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

| | |
|---|---|
| 1 | எரிவாயு தகனமேடையை அறக்கட்டளையே பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டும். |
| 2 | மேற்படி இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே முழுப் பொறுப்பாகும். |
| 3 | எரியூட்டும் இயந்திர புகைபோக்கிகள் புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையிலும் தக்க உயரத்திலும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி பராமரிக்கப்பட வேண்டும். |
| 4 | எரிவாயு மயானத்தில் அறக்கட்டளை எவ்வித கூரை வேய்ந்த கட்டிடமோ அல்லது தீப்பற்றக்கூடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்கப்படக் கூடாது. |
| 5 | முதல் முதலில் பராமரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து 1 வருட காலத்திற்கு மட்டுமே |

| | |
|---|---|
| | எரிவாயு மயான பராமரிப்பு அறக்கட்டளை பராமரிக்க அனுமதிக்கப்படும். கால நீட்டிப்பு தேவைப்படின் ஆறு மாத காலத்திற்கு முன்பாக சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பத்தினை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் புதுப்பித்து / நிராகரித்து ஆணை பிறப்பிக்க வேண்டும். |
| 6 | பராமரிக்க ஒப்படைக்கப்பட்ட பிறகு கூடுதல் கட்டுமானம் ஏதும் தேவைப்படின் உள்ளாட்சியின் அனுமதி பெற்றே வேலை செயல்படுத்த வேண்டும். பராமரிப்பு அனுமதி முடிந்த பிறகு திருப்பி ஒப்படைக்கும்பொழுது இதற்கு எவ்வித இழப்பீடும் உள்ளாட்சி வழங்காது. |
| 7 | பராமரிப்பு அனுமதியை புதுப்பிப்பதும், மறுப்பதும் உள்ளாட்சியின் முடிவை பொறுத்தது. அனுமதி மறுக்கப்பட்டால் சம்மந்தப்பட்ட தனியார் அறக்கட்டளை தனியார் நிறுவனங்கள் தாங்கள் நிறுவிய அனைத்து கூடுதல் உபகரணங்கள் / கட்டிடங்களுக்கு எவ்வித இழப்பீடும் கோராமல் உள்ளாட்சி நிறுவனத்திற்கு ஒப்படைக்க வேண்டும். |
| 8 | மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து ஒப்பந்தப் பத்திரம் உள்ளாட்சிக்கு எழுதிக் கொடுக்க வேண்டும். |
| 9 | மேலே உள்ள நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையாவது மீறப்பட்டாலும் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும். |

**அலுவலக குறிப்பு :** கூட்டம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.14**

அனகாபுத்தூர் நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட ஒப்பந்தபுள்ளி செய்திமலரிலும், தினசரி நாளிதழிகளில் விளம்பரம் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.15**

**2019–ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)-ல் பிரிவு 3,6 மற்றும் 25 களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-ன் படி கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.

1 (i) **செயலாக்கம் அதிகாரி:** நகராட்சி பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

(ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி:** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சி பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களதவர்.

(iii) **மேல்முறையீட்டு அலுவலர்;:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

(iv) **தண்டனை விதிக்கும் முறைகள்;:** ஷை சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துகளை

மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D & O) முதலியன தண்டனை முறைகள்

(v) வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு:

1. மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர்

a) 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்

b) 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்

c) 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்

d) 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்

e) 2000–ம் அதற்கு மேல்.

2. வணிக வளாகங்கள்

a) பெரிய மற்றும் சிறிய துணிக்கடைகள்

b) பல்பொருள் அங்காடிகள் பெரியது

c) திரையரங்குகள்

d) அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனை கூடங்கள்(BARS) மனமகிழ் மன்றம் முதலான இதர இனங்கள்

e) கல்வி நிறுவன வளாகங்கள்

f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள்

g) திருமண மண்டபங்கள், தங்ககும் விடுதிகள் முதலானவை

h) பெரிய நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்

3 மளிகை கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருத்துக்கடைகள்,பழச்சாறு விற்பனைக்கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்

4 சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைகாரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்

## II தண்டனைகள் விபரம்

### பிரிவு 306 (28–A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் | ஐம்பதாயிரம் ரூபாய் | ஒரு லட்சம் ரூபாய் |
| 2. | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடி கள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | பத்தாயிரம் ரூபாய் | பதினைந்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 3. | மளிகை கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்ட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழிணை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூகிக வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஒரு நூறு ரூபாய் | இருநூறு ரூபாய் | ஐநூறு ரூபாய் |

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.16</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதார பணிகளை மேற்கொள்ள **21** துப்புரவு பணியாளர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. துப்புரவு மேற்பார்வையாளர்

பணியிடம் ஒன்று, துப்புரவு ஆய்வர் பணியிடம் ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 120 நபர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 05 அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 2016–17, 2017–18ம் ஆண்டு முடிவுபெற்று, 2018–19 மூன்றாம் ஆண்டு பணி நடைபெற்று வருகிறது. அரசாணை (நிலை) எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ல், அளவுகோலின்படி 198 துப்புரவு பணியாளர்கள் தேவையாக உள்ளது. ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட 21 பணியிடங்களில் 1 துப்புரவு பணியாளர் மாற்றலாகி சென்றார் மற்றும் 1 துப்புரவு பணியாளர் இறந்து விட்டதால் 19 துப்புரவு பணியாளர்களே உள்ளனர். ஆகையால் 19 மற்றும் 120 ஒப்பந்த பணியாளர்கள் போக கூடுதலாக 59 துப்புரவு பணியிடங்கள் தேவைப்படுகிறது.

எனவே, பொது சுகாதார பணிகளையும் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளையும் சிறப்பாக செயல்படுத்திட ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள 21 பணியிடங்களில் 1 துப்புரவு பணியாளர் மாற்றலாகி சென்றார் மற்றும் 1 துப்புரவு பணியாளர் இறந்து விட்டதால் 19 துப்புரவு பணியாளர்களை தவிர்த்து, 179 பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் 2019–20ம் ஆண்டிற்கு தனியார் மூலம் (On Outsourcing Basis) நிரப்பவும் அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, 20 துப்புரவு பணியாளர்களுக்கு ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டும். இந்நகராட்சியில் இது நாள் வரை ஒரு துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடம் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக துப்புரவு பணியாளர்களின் பணியினை மேற்பார்வை செய்ய இயலவில்லை. எனவே, ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்க அனுமதி கோரப்பட்டுள்ள பணியிடங்களை சேர்த்து, 179 துப்புரவு பணியாளர்கள் மற்றும் இவர்களது பணியினை மேற்பார்வை செய்ய 9 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் தேவைப்படுகின்றனர். எனவே 179 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 9 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் (On Outsourcing Basis) நிரப்ப நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்பட்டது. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கே.டிஸ்.எண்.32976/ஜே3/2018 நாள்.11.01.2019ல் 198 துப்புரவு பணியாளர்களில் நகராட்சியில் பணிபுரிந்து வரும் 19 நிரந்தர பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 179 இடங்கள் On Outsourcing மூலம் நிரப்ப நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்படி உத்திரவினை தொடர்ந்து இவ்வலுவலக ந.க.எண்.46/2015/எச்1 நாள்.18.01.2019ந்தேதிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி 21.02.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதினை தொடர்ந்து தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் ஒரு ஒப்பந்தம் மட்டுமே தொழில்நுட்ப தகுதி பெறப்பட்டது. மேற்கண்ட தகுதியுடைய ஒப்பந்தப்புள்ளியினை விலைப்பட்டியல் திறக்கப்பட்டது. அதன் விவரம்,

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | 2018–19ம் ஆண்டிற்கு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் (Out Source) 150 பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் தகுதியுடைய ஒப்பந்ததாரர் மூலம் சப்ளை செய்தல். | 259.00 | மெசஸ்.சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் (பி) லிட் | 15.45 ரூ அதிகம் |

மேற்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விலை விகிதத்தனை விட 15.45 ரூ அதிகமாக உள்ளதால் விலை குறைப்பு செய்து தருமாறு இவ்வலுவலக ந.க.எண்.46/2015/எச்1 நாள்.26.02.2019 மற்றும் 28.02.2019ம் தேதியில் கடிதம் கோரப்பட்டது. ஆனால் ஒப்பந்ததாரர் எந்தவித விலை குறைப்பும் செய்து தரவில்லை.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பு என்பதாலும் மதிப்பீடு தொகையினை விட 15.45 ரூ அதிகம் என்பதாலும் இவ்வொந்தப்புள்ளியினை இரத்து செய்யவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கும், தற்போது ஒப்பந்தப்புள்ளி கோர போதிய காலஅவகாசம் இல்லாததால், (நாடாளுமன்ற தேர்தல் நடைமுறை விதிகள் அமலில் வரவுள்ளதால்) ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் மெசஸ்.சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் நிறுவனத்திற்கு புதிய ஒப்பந்தபுள்ளி கோரி ( இரண்டாம் அழைப்பு) பணி உத்தரவு வழங்கும் வரை நாளது தேதி வரை பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரருக்கு பழைய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மற்றும் நிபந்தனைகளுடன் பணி நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதியளிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கு புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்யும் வரையிலும்,(30 நாட்கள் கால அவகாசம் இல்லாததாலும் தற்போது நாடாளுமன்ற தேர்தல் நடைமுறை விதிகள் அமலில் வரவுள்ளதாலும்) ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வந்த மெசஸ்.சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் (பி) லிட் நிறுவனத்திற்கு கடந்தாண்டு வழங்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் பணியினை மறு ஒப்பந்தபுள்ளி கோரி பணி உத்தரவு வழங்கும் வரை தொடர்ந்து செய்ய கால நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.17</u>

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் 2018-2019ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் 11

ஓட்டுநர் சப்ளை செய்யும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒப்பந்த காலம் மார்ச் 2019ம் முடைவடைந்ததாலும், நாடாளுமன்ற தேர்தல் 2019 தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் வரவுள்ளதனால் மார்ச் 2019 மேற்படி பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோர இயலவில்லை. நாடாளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் முடிவிற்ற பின்பு, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்து வரும் ஒப்பந்ததாரருக்கு புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்யும் வரையிலும், தற்போது நாடாளுமன்ற தேர்தல் நடைமுறை விதிகள் அமலில் வரவுள்ளதாலும் (Election Model Code of Conduct) ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வந்த திரு.வி.குணாளன் ஒப்பந்ததாரருக்கு கடந்தாண்டு வழங்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் பணியினை தொடர்ந்து செய்ய கால நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதியளிக்கலாம்.
2.மேற்கண்ட பணிக்கு புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்யும் வரையிலும்,(30 நாட்கள் கால அவகாசம் இல்லாததாலும் தற்போது நாடாளுமன்ற தேர்தல் நடைமுறை விதிகள் அமலில் வரவுள்ளதாலும்) ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வந்த திரு. வி. குணாளன் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு கடந்தாண்டு வழங்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் பணியினை மறு ஒப்பந்தபுள்ளி கோரி பணி உத்தரவு வழங்கும் வரை தொடர்ந்து செய்ய கால நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.18</u>

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் 2018-2019ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் 1 ஓட்டுநர் மற்றும் 1 துலக்குநர் சப்ளை செய்யும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒப்பந்த காலம் மார்ச் 2019ம் முடைவடைந்ததாலும், நாடாளுமன்ற தேர்தல் 2019 தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் வரவுள்ளதனால் மார்ச் 2019 மேற்படி பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோர இயலவில்லை. நாடாளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் முடிவுற்ற பின்பு, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்து வரும் ஒப்பந்ததாரருக்கு புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்யும் வரையிலும், தற்போது நாடாளுமன்ற தேர்தல் நடைமுறை விதிகள் அமலில் வரவுள்ளதாலும் (Election Model Code of Conduct) ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வந்த திரு.வி.குணாளன் ஒப்பந்ததாரருக்கு கடந்தாண்டு வழங்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் பணியினை தொடர்ந்து செய்ய கால நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதியளிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கு புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்யும் வரையிலும்,(30 நாட்கள் கால அவகாசம் இல்லாததாலும் தற்போது நாடாளுமன்ற தேர்தல் நடைமுறை விதிகள் அமலில் வரவுள்ளதாலும்)

ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வந்த திரு. வி. குணாளன் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு கடந்தாண்டு வழங்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் பணியினை மறு ஒப்பந்தபுள்ளி கோரி பணி உத்தரவு வழங்கும் வரை தொடர்ந்து செய்ய கால நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.19</u>

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110—ன் கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.02.2019 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கு குறிப்பாக பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழைத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஒருமுறை சிறப்பு நிதியுதவி ரூ.2000/— வழங்குதல் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண்.20 நாள்.13.02.2019, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அதி3) துறையின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

அரசாணையின்படி இந்நகராட்சி பகுதியில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் (BPL List) புள்ளி விவரங்கள், அந்தோதய அன்ன யோஜனா (AAY) பயனாளிகள் மற்றும் நடைபாதை சாலையோர வியாபாரிகளின் குடும்பங்களுக்கு பதிவிறக்கம் செய்யப்பட்ட புள்ளி விவர படிவத்தில் கூடுதல் விவரங்கள் சேகரிக்க தினசரி தற்காலிக பணியாளர்கள்(DBC), தூய்மை பாரத இயக்க பணியாளர்கள் போன்றவர்களை களப்பணியில் ஈடுபடுத்திடவும், கூடுதல் விவரங்களை சுகாதார ஆய்வாளர் மற்றும் அலுவலர்களை மண்டல வாரியாக சரிபார்க்கவும், இவர்களை கண்காணிக்க ஆணையர் அவர்களை பொறுப்பு அலுவலராக செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பதிவிறக்கம் செய்யப்பட்ட புள்ளி விவர படிவங்கள் பூர்த்தி செய்தவுடன் www.tnpoverty.com என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் செய்ய சம்மந்தப்பட்ட புள்ளி விவர படிவங்களை பதிவிறக்கம் செய்து தேவையான படிவங்களை அச்சிடவும், பூர்த்தி செய்த படிவங்களை www.tnpoverty.com என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய கால அளவு குறைவாக உள்ளதால் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் நிறுவனத்தின் மூலமாக அரசால் நியமனம் செய்யப்பட்ட கண்காணிப்பு அலுவலர்கள் முன்னிலையில் பணிகளை விரைந்து முடித்திட மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்ற காணோளி கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.2.00/— இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதியளிக்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி.